# கைத்தறி நெசவாளர் சகோதர சகோதரிகளின் வருமானத்தை அதிகரிப்பது குறித்து சிலவார்த்தைகள்





சஞ்சய் குமார் பண்டா இ. ஆ. ப

## பாதுகாத்துப்பராமரிக்கும் அடிப்படையிலான கைத்தறி மேம்பாடு


"**அடிப்படைக் கொள்கை** (மூல மந்திரம்)

கைத்தறித் தொழிலை மேம்படுத்துவது ஒரு "வழிபாடு" போன்றது. இந்த வழிபாட்டில், வாடிக்கையாளர் என்பவர் 'கடவுள் (பகவான்) மார்க்கெட் என்பது "சொர்க்கம்" (சுவர்க்கம்). மேலும் இந்த வழிபாட்டில், "மார்க்கெட் தேவைக்குத் தக்கபடி ஆடைகளை உற்பத்தி செய்வது" என்பது அடிப்படையான கொள்கையாகும். இந்த வழிபாட்டின் (காயத்ரி மந்திரம்) அடிப்படைக் கொள்கை (மூல மந்திரம்) என்பது " வாடிக்கையாளரின் விருப்பத்திற்குத் தக்கபடி புதிய நிறத்திலும், வடிவமைப்பிலும் எந்தவிதக் குறைபாடுமின்றி துணிகளை நெய்வது" ஆகும். தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கமே "ஆலயம்". அதில் நடக்கும் இந்த வழிபாட்டில் நெசவாளர்தான் "வழிபாடு நடத்துபவர்".

இனிவரும் காலங்களில் அரசாங்கம் மற்றும் பொதுவான வாடிக்கையாளர்களின் தீவிரமான ஆதரவோடும், ஒத்துழைப்போடும் இந்த வழிபாடு (கைத்தறி நெசவு) நாட்டின் சமுதாய பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் என்று நம்பப்படுகிறது.

(1994 ஆம் ஆண்டில் ஒதிஷாவின் அப்போதைய ஜவுளித்துறை இயக்குநர் திரு. எஸ். கே. பண்டா இ.ஆ.ப. அவர்களால் ஒதியாவில் எழுதப்பட்ட "கைத்தறி நெசவாளர் சகோதரர் சகோதரிகளுக்கு ஒரு வார்த்தை" என்ற நூலிலிருந்து ஒரு பகுதி)





### கைத்தறி நெசவாளர் சகோதர சகோதரிகளின் வருமானத்தை அதிகரிப்பது குறித்து சிலவார்த்தைகள் 1

உடைதான் உணவுக்கு அடுத்தபடியாக, மனிதர்களின் மிக முக்கியமான அடிப்படைத்தேவை. மனிதனின் ஆடை அணியும் இயல்பு, பலப்பல ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ந்துள்ளது. ஆரம்பத்தில், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் அடிப்படையிலான இழைகளை கையால் இயக்கப்பட்ட தறிகளில் நெய்து, இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். துணிகளின் தன்மைகளும் வகைகளும் தொழிற்புரட்சியாலும், பின்னர் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் வடிவமைப்பு வளர்ச்சியாலும் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உள்ளாயின. என்ற போதிலும், கைத்தறி ஆடைகள் இந்தியாவின் உயர்ந்த கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகத் தொடர்ந்தன. தனித்துவமிக்க நிறம், அற்புதமான நெசவு, வடிவமைப்பு இணைப்பு ஆகியவற்றால் கைத்தறி ஆடைகள் உள்நாடு மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டிலும் பரவலாகப் பாராட்டப்பெற்றன. உண்மையில் சொல்லப்போனால், ஆங்கிலேயர்கள் முதன்முதலில் இந்தியாவிற்கு வந்தபோது, உயர்வான இந்திய கைத்தறி ஆடைகள் அவர்கள் கண்களை உறுத்தின. இந்திய மார்க்கெட்டில் தங்கள் ஆடைகளை நுழைப்பதற்காக உள்நாட்டுக் கைத்தறித்தொழிலை அழிப்பதற்கான நடவடிக்கைகளை கம்பெனி மேற்கொண்டது.

மின்தறி அறிமுகமானதால் கைத்தறி வலிமையான போட்டியை எதிர்கொண்டது. வெளிப்படையான பல காரணங்களின் விளைவாக மின்தறியால் நெய்யப்பட்ட 'பிளைன்' துணிகளின் விலை அதேபோல் கைத்தறியில் நெய்யப்பட்ட துணிகளைவிட விலை குறைவாய் இருந்தது. சாதாரண பொதுமக்கள், அதன் குறைந்த விலைக்காக மின்தறி ஆடைகளையே விரும்பினர். சுதந்திரத்திற்குப்பிறகு, கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்காக, அதிக எண்ணிக்கையிலான திட்டங்களும், திட்ட வரைவுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

---

1 தற்போது இந்திய ஜவுளி அமைச்சகத்தில் செயலாளராகப் பணியாற்றிவரும் ஒரு அரசு ஊழியரான டாக்டர். சஞ்சய் குமார் பண்டா இ. ஆ. ப அவர்களால் எழுதப்பட்டது. சொல்லப்பட்டிருக்கும் கருத்துகள் அவருடைய தனிப்பட்ட கருத்துகள். மின்னஞ்சல்: sanjaypandaias@gmail.com (2015 ஆம் ஆண்டு மே பத்தாம் தேதி)

கைத்தறியால் மட்டுமே உற்பத்தி செய்யப்படவேண்டும் என்று கூட சிலவகை ஆடைகள் ஒதுக்கிவைக்கப்பட்டன. என்றாலும், மின்தறி ஆடைகள் அவற்றின் குறைந்த விலையால் ஜவுளி மார்க்கெட்டில் முக்கிய இடத்தைப் பெற்றன. தொழில்நுட்ப வளர்ச்சி, மின்தறி மற்றும் ஒருங்கிணைந்த துணி ஆலைகளின் வளர்ச்சி ஆகியவற்றை எதிர்கொள்ள இயலாநிலையில் கைத்தறி ஆடைகள் ஒரு சாரார் விரும்பும் ஆடையாகவே தொடர்ந்து இருந்து வந்தது.

சுதந்திரப் போராட்டத்தின்போது, நம் தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்கள் கையால் நூல் நூற்றல், கைத்தறி துணி நெய்தல், இந்தியாவில் நெய்யப்பட்ட கதர் உடைகள் அணிதல் ஆகியவற்றின் தேவையை வலியுறுத்தி வந்தார். சொல்லப்போனால் இதுவே நம்முடைய சுதந்திரப் போராட்டத்தில் மேற்கொண்ட சுதேசி இயக்கத்தின் பிரிக்கமுடியாத அங்கமாக ஆகிவிட்டது. எனினும், இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில், இந்த நிலை மாறிவிட்டது. இந்திய ஜவுளித்துறை உலக ஜவுளித் தொழிலில் மிகமுக்கியப் பங்களிப்பு செய்யும் அளவுக்கு உயர்ந்தது. நூற்பு, நெசவு, ஆடைகள், உடைகள், வடிவமைப்புப் பிரிவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒழுங்குபெற்ற இந்திய ஜவுளித்தொழிலை உலகம் முழுமையும் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. கைத்தறி, மின்தறி, துணி ஆலைகள் உருவாக்கும் துணிவகைகள் ஆகியன மார்க்கெட்டில் ஒன்றோடொன்று இணைந்தே இருக்கும் என்ற யாதார்த்த நிலையை நடைமுறை அடிப்படையோடு மனத்தில் கொண்டு, அதனை எதிர்நோக்குவதற்கு கைத்தறித்தொழிலை ஒருங்கிணைக்க வேண்டியது தேவையானதாகும். இறுதியாக துணியின் தரம், விலையை அடிப்படையாகக்கொண்டு ஒரு குறிப்பிட்ட துணிவகையை வாங்கும் முடிவு வாடிக்கையாளரிடமே உள்ளது. இந்த யதார்த்த நிலையை ஏற்றுக்கொண்டு அதற்குத் தங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டியது கைத்தறி நெசவாளர்களுக்கு அவசியமானதாகும்.

இலட்சக்கணக்கான கிராம மக்களுக்கு குறைந்த முதலீட்டில், மிகச்சிறந்த உள்நாட்டு வெளிநாட்டு மார்க்கெட் வசதிகளுடன், இந்திய பாரம்பரியம், பண்பாடு, வழிமுறை ஆகியவற்றோடு



வாழ்வாதார வாய்ப்பை கைத்தறித் தொழில் வழங்குகிறது. ஆனால் அதோடு கூட, குறைந்த கரியமிலவாயு வெளிவிடுதல், மின்சக்தி மற்றும் அரியவகை சக்திகளுக்கான குறைந்த தேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நகரங்களுக்கு குடிபெயர்தலைத் தடுத்தல், அதன்மூலம் நகரமயமாதலையும் குறைத்தல் ஆகிய பலவிதமான மறைமுகமான பயன்களும் உள்ளன. சமூக நோக்கில், பெண்களுக்கும் பின்தங்கிய வகுப்பினரான அட்டவணை இனத்தவர், பழங்குடியினர், மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மைஇனத்தவர் ஆகியவர்களுக்கு வசதி ஏற்படுத்தல் ஆகியவற்றில் கைத்தறி மிக முக்கிய பங்கு வகித்து அதன்மூலம் முன்னேற்றத்தையும் நிரந்தர வசதிகளையும் வழங்குகிறது.

பல்வேறுபட்ட தன்மையிலும், வடிவமைப்பை எளிதாகவும் விரைவாகவும் மாற்றமுடிகின்ற இயல்பிலும் கைத்தறியின் அதிகமான வலிமை அடங்கியுள்ளது. நூலின் வண்ணத்தையோ, நெசவையோ அல்லது இரண்டையும்கூட எளிதாக மாற்றுவதன்மூலம் கைத்தறி நெசவாளர் பலவகையான துணிகளை ஒவ்வொன்றும் ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டிருக்குமாறு உற்பத்தி செய்கிறார். ஆனால் மின்தறியில் உற்பத்திசெய்தால் ஒரேமாதிரியாக ஒவ்வொருமீட்டரும் ஒன்றுபோலவே இருக்கும். வடிவமைப்பு, நிறம் என்பதோடும்கூட, இது கையால் நெய்யப்படுகிற உண்மையால், தேசிய மற்றும் பன்னாட்டு மார்க்கெட்களில் "குறிப்பிட்ட வகையினர்" விரும்பி வாங்கும் தனிப்பட்ட வகையாக கைத்தறியை சிறப்புறச் செய்கிறது. சிறப்பான முறையில் கைத்தறியில் நெய்யப்பட்ட பனாரஸ், ஹம்தானி, காஞ்சிபுரம் அல்லது ஒதிஷா இகத் சேலைகளை அணிந்திருக்கும் பெண் உலகின் எப்பகுதி மக்களையும் கவர்ந்து விடுகிறார். ஏனென்றால் அதன் தனிச்சிறப்பும் தனிப்பட்ட தோற்றமும்தான் அதன் காரணமாகும். எத்தகைய பெரிய கூட்டத்தில் இருந்தாலும் இதை அணிந்திருப்பவருக்கு ஒரு தனித்த அடையாளமும், மதிப்பும், இந்தியர் என்பதில் உள்ள அளவில்லா பெருமிதத்தையும் இது கொடுக்கிறது. இந்நிலையில் போட்டி நிறைந்த மார்க்கெட்டில் கைத்தறி தன்னுடைய இடத்தையும் முக்கியத்துவத்தையும் நிலைநிறுத்திக் கொள்வதற்கு சிறந்த வழி, சிறந்த தரமுள்ள, குறைபாடு இல்லாத, விலைகொடுத்து வாங்கும் சக்தியுள்ள வாடிக்கையாளர்களின் தேவையை நிறைவு செய்யும்

வகையில் விரைவாக மாறிவரும் வடிவமைப்புகளுடன் கூடிய அதிக மதிப்புள்ள துணிவகையை உற்பத்தி செய்வது ஆகியவற்றில் இருக்கிறது. கைத்தறியில் உருவாக்கும் ஒப்பீட்டு நோக்கில் விலைகுறைந்த துணிவகைகள், உள்நாட்டுப் பயன்பாட்டிற்கும் உள்ளூர் மார்க்கெட் விற்பனைக்கும் தொடர்ந்து தயாரிப்பில் இடம் பெற்றிருக்கும். ஆனால் கைத்தறித் துணிகள் மார்க்கெட்டிற்குச் சென்ற உடனேயே தரத்தாலும் விலையாலும் மின்தறியால் தயாரான துணிவகைகளுடன் போட்டியிடவேண்டிய நிலையிருக்கும். கைத்தறியில் தயாரான 'ப்ளைன்' துணிகள் மின்தறிகளில் தயாரான அத்தகைய துணிகளுடன் போட்டியிடுவது கடினமானதாக இருக்கும். ஏனென்றால் <u>வாங்குகின்ற பொதுமக்கள் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை உணரவும் பாராட்டவும் இயலாமல் போகலாம்.</u>

மேற்கண்டவற்றைக் கருத்தில் கொண்டு, நல்ல தரமான துணிவகைகளை, எந்தவித குறைபாடு இல்லாமல் நாட்டின் மாறுபட்ட வழிமுறை கைத்தறி வகைகளுக்கேற்ற வடிவமைப்புகளோடும் ஒருவகையானவற்றை விரும்பும் மார்க்கெட் தேவைக்காகவும் அதிக விலைகொடுத்து வாங்கக்கூடிய வாடிக்கையாளர்களுக்காகவும் உற்பத்தி செய்ய வேண்டி செயல்படுவதே கைத்தறியை மறுசீரமைக்கவும் முன்னேற்றுவதற்கும் முக்கியமான அம்சமாகும்.

பொதுவாக கைத்தறியை முன்னேற்றுவதற்கும் குறிப்பாக நெசவாளர்களின் வருமானத்தை அதிகப்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் மத்திய மாநில அரசுகள் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகள் விரிவான அளவில் இரண்டு வகைகளுக்குள் அடங்கும். அவை சட்டபூர்வமானது, முன்னேற்றத்துக்கானது என்பவையாகும். சிலவகையான துணிகளை கைத்தறியில் மட்டுமே தயாரிக்க ஒதுக்கிவைத்தல், கைத்தறிக்கான நூல் வழங்குவதை உறுதி செய்வதற்கு நூற்பாலைகள் தங்களின் ஒருபகுதி உற்பத்தியை அதற்கேற்பச் செய்வது என்பதை அவற்றின் பொறுப்பாக்கப்பட்டது என்பதை சட்டபூர்வ நடவடிக்கை உள்ளடக்கியது.



முன்னேற்றத்திற்கான நடவடிக்கை என்பது, ஜவுளி அமைச்சகத்தின் கீழுள்ள மேம்பாட்டு ஆணையர் (கைத்தறி) மேற்கொள்ளும் திட்டங்களும் திட்டச்செயல்பாடுகளுடனும் மாநில அரசுகள் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுவதற்காக மேற்கொள்ளும் அத்தகைய திட்டங்களையும் உள்ளடக்கியதாகும்.

நடைமுறையில் இருந்துவரும் அரசுக் கொள்கைகளும் திட்டங்களும் மறுபரிசீலனை செய்யப்பட்டு விரும்பும் நோக்கத்தை அடையும் வண்ணம் வலுப்படுத்த வேண்டியது தேவையானதாகும். ஜவுளித்துறை முழுவதையும் கருத்தில் எடுத்துக் கொண்டு, சிலவகைகளை விரும்பும் பகுதியினரையும் கணக்கில்கொண்டு கைத்தறி நெசவாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருள்களை மார்க்கெட்டில் விற்பனை செய்ய வேண்டும் என்ற விருப்பத்தைப் பாதுகாக்கும் வண்ணம் <u>சிலவகைத்துணிகளை உற்பத்தி செய்வதைக் கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்குவது என்பது வலுப்படுத்த வேண்டியது தேவையானதாகும்.</u> அதைப்போலவே, <u>கைத்தறி நெசவாளர்களுக்கு தரமான கச்சாப்பொருள்கள், நியாயமான விலையில், சரியான காலத்தில் கிடைக்கும் நிலையை உறுதிப்படுத்தும் நோக்கத்தை அடைவது</u> ஒரு புறமும், அதேசமயத்தில் இந்த பயன்கள் தவறான முறையில் பயன்படுத்தாமலிருப்பது மறுபுறமும் என்பதைக் கருத்தில் கொண்டு கைத்தறிப் பகுதிக்குத் தேவையான கச்சாப்பொருள்கள் வழங்குவதை உறுதி செய்வதற்கு <u>நூல் கண்டுகள் வழங்கும் பொறுப்பை</u> மீள்பார்வைக்கு உட்படுத்தி வலுப்படுத்த வேண்டும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 27 நெசவாளர்கள் சேவை மையங்கள் மூலம் <u>கைத்தறி நெசவாளர்களுக்கு வடிவமைப்பு, வண்ணம் போடுதல், புதியவகைகளை நெய்தல் ஆகியவற்றிற்கான தொழில்நுட்ப உதவியை</u> மேம்பாட்டு ஆணையர் (கைத்தறி) அவர்கள் வழங்கி வருகிறார். அத்துடன் வாரணாசி, கௌஹாத்தி, ஜோத்பூர், சேலம், பாராக்ரந்த் சாந்தப்புராரே ஆகிய இடங்களில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனங்கள் பட்டய வகுப்புகளை கைத்தறியை முன்னேற்றுவதற்கான பயிற்சி பெற்றவர்களை மேம்படுத்துவதற்காக நடத்திக் கொண்டு

வருகின்றன. உருவாகிவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வடிவமைப்பு, தகவல் தொழில்நுட்பம், கணக்கியல், வணிக மேலாண்மை போன்றவற்றை கூடுதலாக உள்ளடக்கிய பயிற்சிகளை சீர்படுத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கைத்தறி முன்னேற்றத்திற்கு கையாளப்படும் <u>வழிமுறை உத்திகள்</u>, தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்களை தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் ஒன்றிணைப்பதும், மார்க்கெட் தேவைக்கு ஏற்றதான துணிவகைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதையும் முக்கிய அடிப்படையாகக் கொண்டுள்ளது. தொடக்க நெசாவாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட அளவில் உள்ள உயர்நிலை நெசவாளர் கூட்டுறவு சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அத்தோடு சில மாநிலங்களில் மாநிலங்களால் நடத்தப்படும் கைத்தறி மேம்பாட்டுக் கழகங்கள் கூட்டுறவில் இணையாத நெசவாளர்களுக்கும் உதவி செய்து வருகின்றன. கைத்தறி வகைகள் தனியார் வணிக நிறுவனங்களாலும், கலை, கைத்தொழில் என்ற அளவில் பல்வேறு முகவாண்மைகளாலும் வாங்கப்படுகின்றன. சுதந்திரம் பெற்ற தொடக்க காலங்களில் கைத்தறித் தொழிலை முன்னேற்றுவதில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், கைத்தறி மேம்பாட்டுக் கழகங்களும் மிகுந்த பயனுள்ள பங்கை வழங்கின. ஆயினும் காலப்போக்கில் இந்த அமைப்புகள் மிகப்பெரிய நிர்வாக ஊழியர்கள் மற்றும் அதிகமான சம்பளப்பட்டுவாடாவுடன் அதிகமான பளுவைச் சுமக்க வேண்டியதாகிவிட்டது. இதன் விளைவாக நெசவாளர்களுக்குச் சேவை செய்வதில் இந்த அமைப்புகளின் திறன் மோசமாகப் பாதிக்கப்பட்டது. மறுபக்கத்தில், <u>இணையதளம் மற்றும் மற்ற தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் ஏற்பட்ட செயல்பாடுகள் மக்கள் தொடர்பில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்து, நாடுகளுக்கிடையிலான தூரத்தைப் பெரிய அளவில் குறைத்து விட்டன.</u> தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலமைந்த நிதிநிலை மேம்பாட்டுச் செயல்தொடக்கமான மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் 'பிரதமரின் ஜன் தன் யோஜனா' கிராமப் புரங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் சக்தியை வலுப்படுத்துவதற்குப் பயன்படுகிறது. <u>இத்தகைய முன்னேற்றத்தில்</u> நிறுவனம் சார்ந்த கடன்களையும் மார்க்கெட்



வாய்ப்புகளையும் அடைவதற்கு <u>கைத்தறி நெசவாளர்கள் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள முன்வருதல் வேண்டும்.</u>

தறி வைத்துள்ள ஒவ்வொரு நெசவாளரும் ஒரு வர்த்தக அலகினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால், மார்க்கெட் தொடர்பை அதிகப்படுத்தி, தேவையான அளவிலும் தரத்திலும், கால அட்டவணைப்படி தொடர்ந்து செயல்பாட்டு அடிப்படையில் இயங்க 100 அல்லது அதற்குமேற்பட்ட நெசவாளர்களை ஒரு பொதுவான அமைப்பில் கொண்டு வருதல் வேண்டும். கைத்தறித் தொழிலை பொதுவாக மார்க்கெட் சார்ந்ததாகவும், குறிப்பாக வடிவமைப்பு சார்ந்ததாகவும் ஆக்குவதற்கு இது முக்கியமானதாகும். இந்த நோக்கத்திற்காக, கைத்தறி செயல்பாடு ஏற்கனவே இருக்கிற அல்லது ஏற்படுத்த முடிகிற <u>ஒரு ஒன்றியத்திற்கு ஒரு குழுவாவது மேம்படுத்துவதற்கு கைத்தறி குறித்த அணுகுமுறையை மறுசீரமைப்பு செய்வது அவசியமானதாகும்.</u> நெசவாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்து ஊதியம் தொடர்பான செலவுகளை ஈடுகட்டுவதற்கான வர்த்தகம் இருந்தால், ஒரு ஒன்றியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் கூட உருவாகலாம்.

இதனைக் கருத்தில் கொண்டு, ஜவுளி அமைச்சகம் மாநில அரசைக் கலந்து ஆலோசித்து, ஒவ்வொரு ஒன்றியத்திலுமுள்ள கைத்தறி நெசவாளர் குழுவுக்கு உதவி செய்வதற்கு ஒரு பொது வசதிவாய்ப்பு மையத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகளைத் தொடங்கி உள்ளது. கச்சாப்பொருள்களையும் உற்பத்தி செய்த பொருள்களையும் சேமித்து வைப்பதற்கான கிடங்கு ('குடோன்') மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு 'பிரதமரின் ஜன் தன் யோஜனா' மூலம் நிதிவசதி கிடைப்பது உள்ளிட்ட செயல்பாடுகளை தகவல் தொழில்நுட்ப அடிப்படைகளுடன் வழங்குவதற்கான இணையதள வசதியுடன் கூடிய அலுவலகம் உள்ளிட்ட அடிப்படை உள்கட்டமைப்பு வசதி ஒவ்வொரு பொது வசதிவாய்ப்பு மையத்திற்கும் வழங்கப்படும். நகரப்பகுதியிலிருந்து வந்து உற்பத்தி இடத்தில் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் தங்க விரும்பும் வரைகலையாளர்\அதிகமாக வாங்குவோர் தங்கி ஓய்வெடுப்பதற்கான ஒரு ஓய்வு அறையையும் இந்த மையம்

பெற்றிருக்கும். ஒவ்வொரு பொது வசதிவாய்ப்பு மையத்திலும் வடிவமைப்பு, வண்ணமிடுதல், மற்றும் நெசவு வண்ணமிடல்\வடிவமைத்தல் ஆகியவற்றுக்குத் தேவையான தளவாடங்கள், தண்ணீர் வழங்குதல், வெளிச்செல்வகைச் செயல்பாடு மற்றும் அதிக அளவிலான செயல்முறைகள் ஆகியற்றுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும். பொது வசதிவாய்ப்பு மையம், தற்போது அந்த ஒன்றியத்தில் இலாபகரமாக இயங்கிக்கொண்டிருக்கும் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதன்மூலம் உருவாக்கப்படும். ஒரு இடத்தில் அத்தகைய தொடக்க சங்கம் இயங்கவில்லை என்றால், கிராமப் பஞ்சாயத்திடமிருந்தோ, மாநில அரசிடமிருந்தோ அல்லது நன்கொடை மூலமோ பெறப்படும் இடத்தில் அத்தகைய வசதியை உருவாக்கி மேம்படுத்தலாம். அந்தமாதிரி ஒரு சமயத்தில், பதிவு பெற்ற சுய உதவிக்குழு மூலமோ அல்லது அந்த பகுதியில் நல்ல செயல்பாட்டில் இருக்கும் வேறு ஏதேனும் கைத்தறி நெசவாளர் அமைப்பு மூலமோ பொது வசதிவாய்ப்பு மையம் நடத்தப்படும். நிர்வாக உதவி வழங்குவதற்கு ஒரு தொழில்நுட்ப அறிவுகொண்ட கைத்தறி பட்டயப் படிப்பு படித்தவருடன் அந்தப் பகுதியில் உள்ள ஒரு முன்னாள் இராணுவத்தினரும் இணைந்து பொது வசதிவாய்ப்பு மையம் நடத்தப்படும். நெசவாளர் சேவை மையம் மற்றும் மாநில அரசில் கைத்தறி சம்பந்தப்பட்ட பணிகள் கவனித்துவரும் தொழில்நுட்ப அதிகாரிகள் பொது வசதிவாய்ப்பு மையத்திற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவார்கள்.

வழிமுறையாக, தலைமையிடம் பெற்ற நெசவாளர்கள் கைத்தறி வர்த்தகத்தை ஒரு வியாபார நிறுவனமாக நடத்திக்கொண்டு கைத்தறிப் பொருள்களுக்கு விற்பனை உதவியை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய தலைமைநிலை நெசவாளர்கள் இலாபத்தின் அதிகமான பகுதியை தாங்கள் எடுத்துக்கொண்டு உற்பத்தி செய்யும் தொடக்க நெசவாளர்களுக்கு குறைந்த அளவில் மட்டுமே கொடுத்து ஏமாற்றுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு, அரசாங்க உதவியைப் பெற்று தளவாடங்களுடன் தறிகளைத் தங்கள் சொந்த இல்லங்களிலேயே அமைப்பதற்கு ஒவ்வொரு கைத்தறி நெசவாளரும்



முன்வரவேண்டியது தேவையானதாகும். இது அந்த நெசவாளருக்கு தானே உற்பத்தி செயவதற்கான சுதந்திரத்தையும் அவற்றைத் தானாகவோ தொடக்க சங்கம் அல்லது நெசவாளர் வர்த்தகர் மூலமாகவோ தன் விருப்பப்படி விற்றுக்கொள்ளும் வசதியைத்தரும்.

கைத்தறி நெசவு என்பது வீட்டு வேலையை அடிப்படையாகக் கொண்டது. இது வீட்டிலிருந்து குழந்தைகளையும் முதியவர்களையும் கவனித்துக் கொள்ளும் வீட்டுப் பணிகளுடன் உள்ள பெண்களுக்கு குறிப்பாக வாழ்வாதார வாய்ப்புகளை வழங்கக்கூடிய ஒரு வழியாக இருக்கிறது. அத்தகைய பெண்கள் பயிற்சி, தறிகள் மற்றும் தளவாடங்களைப் பெறுவது ஆகியவற்றுக்கு அரசாங்க உதவிகளைப் பெற்று ஆடைகளை வர்த்தக அளவில் உற்பத்தி செய்து பயன்பெற முடியும். இது கிராமத்துப் பெண்களுக்கு உண்மையான நிலையில் வலுவைக் கொடுப்பதுடன் அவர்களுக்கு கைத்தறி மூலம் ஒரு முறையான வருவாயை ஈட்டிக் கொடுக்கும்.

தேவைக்கேற்ப, இருக்கும் வசதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் புதியனவற்றை உருவாக்கிக் கொள்வதற்கும் புதிய பணியிடங்களைக் கட்டுவதற்கும் தறி மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கும் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின்படி உள்ள உதவிகளை நெசவாளர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். நெசவாளர்கள் அவர்கள் விருப்பப்படியே சேவை மையம் மற்றும் மாநில அரசின் தொழில்நுட்ப ஊழியர்களின் உதவியுடன் தேவையான பொருள்களை நெசவாளர் வாங்கிக்கொள்வதற்கு ஏற்றவகையில், அத்தகைய உதவிகள் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்த முடியும். கைத்தறி நெசவாளர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை வழங்குவதற்காக இப்போது நடைமுறையில் இருக்கும் நெசவாளர்கள் நலத்திட்டம் 'ராஷ்ட்ரிய ஸ்வாஸ்த்ய பிமா யோஜனா' அடிப்படையில் மாற்றியமைக்கப்படுகிறது. இதை நடைமுறைப்படுத்தும் செயல்பாட்டை சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் கவனித்து வருகிறது. அவர்கள் கைத்தறி நெசவாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பை வழங்கும் விரிவான திட்டத்தை உருவாக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இறந்தாலோ அல்லது

ஊனமுற்றாலோ இரண்டு இலட்ச ரூபாய் காப்பீடு வழங்கும் திட்டமான 2015 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் தேதி தொடங்கப்பட்டுள்ள பிரதமரின் சுரக்ஷா பிமா யோஜனா மற்றும் பிரதமரின் ஜ்யோதி பிமா யோஜனா ஆகிய திட்டங்களின் பயன்களையும் கைத்தறி நெசவாளர்கள் அடைந்து பயன்பெற முடியும்.

கடன்வசதி கிடைப்பது கைத்தறி நெசவாளர்களின் மற்றுமொரு முக்கியமான தேவையாகும். அது தொடக்க கூட்டுறவு சங்கம் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 'நபார்டு' மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன், மத்திய அரசு நியாயமான வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனத்தை வழங்குவதற்காக நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை மாற்றி அமைப்பதற்கான ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது. என்றாலும், இந்த முயற்சியின் வெற்றி மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டுள்ளது. கூட்டுறவின்கீழ் இல்லாத கைத்தறி நெசவாளர்களுக்குக் கடன்வசதி வர்த்தக வங்கிகள் வழங்குவதற்காக நெசவாளர் கடன் அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் நெசவாளர்கள் கடன் பெறுவதற்கு உதவுவதற்காக உபரி பண உதவி வழங்கப்பட்டு வருகிறது. இணைய தள தொழில்நுட்பத்தின் மூலம் நெசவாளர்கள் வங்கியிலிருந்து நேரடி கடன் பெறுவதற்கு 'பிரதமரின் ஜன் தன் யோஜனா' திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்காக மற்ற வசதிகளுடன் புதிய கணக்கு தொடங்குவது மற்றுமொரு முன்னேற்றமாகும். மார்க்கெட் தேவைக்கு ஏற்ப புதிய துணிவகைகளை தயார் செய்து உரிய நேரத்தில் விற்பதற்கு அவர்கள் தொடங்கிய உடனேயே அவர்களால் கடனை திருப்பி செலுத்த முடியும். கடன் வசதி தொடர்ச்சியாகவும் நீண்ட கால அடிப்படையிலும் சுழற்சிமுறையில் பயன்படும்.

ஒருங்கிணைந்த முறையில் கைத்தறி முன்னேற்றத்திற்காக, சரியான தகவல் பெற்றிருத்தல் அவசியமானதாகும். மூன்றாவது கைத்தறி புள்ளிவிவரம் சேகரிப்பு 2010 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. என்றாலும், இந்த புள்ளிவிவரக் கணக்கெடுப்பில் உள்ள தகவல்கள் போதுமானவையாக இல்லை. பின்கண்ட



விவரங்களை உள்ளடக்கி அதனை இப்போதைய நிலையில் உருவாக்க வேண்டியது அவசியமாகும். (1) நெசவாளரின் விவரங்கள், அவருடைய குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள், ஆதார் எண், வங்கிக்கணக்கு முதலான நெசவாளர் விவரங்கள் (2) கிடைக்கக்கூடிய ஆவணங்கள் படியான வறுமைக்கோட்டுநிலை காட்டும் பொருளாதார விவரம் (3) நெசவாளரால் நெய்யக்கூடிய அல்லது நெய்துள்ள பொருள்கள் பற்றிய உற்பத்தி விவரம் ஆகியனவாகும். கையிருப்பில் உள்ள தகவல்களை கணினியில் பதிவேற்றி இணையதளத்தில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி, நவீனவகை ஆடைகள் ஆகியவற்றில் வர்த்தகம் செய்யும் மொத்தமாக வாங்குவோர்க்கும் மொத்த விற்பனையாளர்களுக்கும் சில்லரை விற்பனையாளர் களுக்கும் கூட இந்த தகவல் பயன்தரும். இந்த தகவல் தொகுப்பினால், வாங்குவோர் நேரடியாகவே உற்பத்தி நெசவாளர்களுடன் தொடர்புகொண்டு செயல்பட முடியும். அது அதிக அளவிலான உற்பத்திக்கும் எளிதாக வர்த்தகம் செய்வதற்கும் இட்டுச்செல்லும். இப்படிப்பட்ட தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடுகளில் கைத்தறி நெசவாளர்கள் பயனடைவதற்கு முன்வரவேண்டியது தேவையானதாகும்.

கடந்த பல ஆண்டுகளில், நெசவாளர் குடும்பத்தில் கல்விநிலை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. நெசவாளர் குடும்பங்களில் அநேக பட்டதாரிகளும் முதுநிலைப் பட்டதாரிகளும் உள்ளனர். நெசவாளர் குடும்பத்தின் அத்தகைய கல்விகற்ற இளைஞர்கள் கைத்தறி ஆடைகள் உற்பத்தியையும் மார்க்கெட் நிலவரத்திற்கு ஏற்ப அவற்றின் விற்பனையையும் நெசவாளர் தொழில்முனைவோர் என்ற வகையில் ஏற்றுச் செய்ய முடியும். பெரும்பாலான நெசவாளர்கள் மற்ற பின்தங்கிய வகுப்பு, அட்டவணை வகுப்பு, சிறுபான்மையினர் என்ற வகையில் இருப்பதால், அத்தகைய நெசவாளர் குடும்பங்களின் இளைஞர்கள் தங்கள் தொழில்நிறுவனத்தைத் தொடங்க சமூகநீதி மற்றும் செயலாக்க அமைச்சகம் மற்றும் சிறுபான்மையினர் விவகாரங்கள் அமைச்சகம் ஆகியவற்றின் உதவியுடன் செயல்படும் தேசிய பின்தங்கியோர்\அட்டவணை இனத்தவர்\சிறுபான்மையினர் நிதி மேம்பாட்டு கழகங்கள் மூலம் சலுகையுள்ள நிதிவசதிகளைப்

பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த கழகங்கள் மாநில வழிப்படுத்தும் முகவாண்மைகள் மூலம் ரூபாய் 10 இலட்சம் வரை கடனாக வழங்க முடியும். இத்தகைய நிறுவனங்களுக்கு வர்த்தக வங்கிகளும் நிதி உதவி செய்கின்றன.

தரமான கைத்தறி துணிகளை உற்பத்தி செய்வதற்கு தரமான கச்சாப்பொருள்களான பருத்தி\பட்டு இழைகள், வண்ணங்கள், இரசாயனங்கள், தறி மற்றும் தளவாடங்கள் ஆகியன கிடைப்பது மற்றோர் அதிக முக்கியான தேவையாகும். கைத்தறி நெசவாளர் தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் நூற்பாலைகள் இழை நூல் கண்டு வழங்கும் திட்டத்தின்படி நூலிழைகளை உற்பத்தி செய்ய வேண்டியது தேவையானதாகும். கைத்தறி நெசவாளர்களுக்கு நியாமான விலையிலும் குறிப்பிட்ட காலத்திலும் தரமான இழைகள், வண்ணங்கள், இரசாயனங்கள் போன்றவற்றை வழங்கும் முக்கிய நோக்கத்துடன் லக்னோவைத் தலைமை இடமாகக் கொண்டு மத்திய பொதுத்துறை நிறுவனமான தேசிய கைத்தறி மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் நிறுவப்பட்டுள்ளது. இது தள்ளுபடியோடு கூடிய ஆலை வாயில் விலைத்திட்டம் என்பதன்மூலம் உதவியளிக்கப்படுகிறது. இந்த வசதிகளை மாநிலத்திலுள்ள தன்னுடைய கிளைகளின்மூலம் தேசிய கைத்தறி மேம்பாட்டுக் கழகம் வழங்கி வருகிறது. இதன் கிளைகளை ஒவ்வொரு மாநிலத்திலுள்ள நெசவாளர் சேவை மையங்களுடன் இணைத்து நெசவாளர்கள் வசதிக்கேற்பச் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நெசவாளர் தொகுப்பிற்கும் தேவையான கச்சாப்பொருள்களின் தேவையைக் குறிப்பிட்டு ஒரு உற்பத்தித் திட்டத்தை காலாண்டு அடிப்படையில் தயாரித்து தேசிய கைத்தறி மேம்பாட்டுக் கழகத்திற்கு முன்கூட்டியே அனுப்புமாறு மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இழைகளும் இரசாயனங்களும் தேவையான அளவில் நியாயமான விலையில் ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்குவதை உறுதி செய்வதற்கு தேசிய கைத்தறி மேம்பாட்டுக் கழகம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வண்ணமிடுதல், நெசவு, வடிவமைத்தல் ஆகியவற்றில் தரத்தை உயர்த்துவதற்கான பயிற்சி மற்றும் புதிய துணிவகைகளை நெய்தல்



ஆகியன கைத்தறியை மேம்படுத்துவதில் மற்றுமொரு முக்கியமான அம்சமாகும். இந்த உதவியை நெசவாளர் சேவை மையம் கைத்தறித்துறையின் மேம்பாட்டைக் கவனிக்கும் மாநில அரசின் தொழில்நுட்ப அதிகாரிகளின் உதவியுடன் நெசவாளர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. நெசவாளர் சேவை மையம் மற்றும் பொது வசதிவாய்ப்பு மையம் ஆகியவற்றில் வண்ணமிடுதலில் பயிற்சி தனித்தனியே அமைத்து நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நெசவாளர்களின் மிகச்சிறந்த பணித்திறமையை ஊக்குவிக்கும் வகையில், தேசிய விருது மற்றும் சன்ட் கபீர் விருது ஆகியன மிகச்சிறந்த பங்களிப்பு, கைத்தறி மேம்பாட்டுக்கான கைத்தொழில் திறமை ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. திறமை மிக்க நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்படும் இந்த அங்கீகாரம், கைத்தறி நெசவில் மிகுந்த ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் தொடர்ந்து அவர்கள் ஈடுபடுவதற்கு வழிவகுக்கிறது.

மாண்புமிகு பிரதமரின் அறிவுரைக்கிணங்க கைத்தறியை நவீன வடிவமைப்புடன் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 15 தேசிய புதுமுறை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவன வளாகங்களில் உள்ள மாணவர்களும் பயிற்றுநர்களும் கைத்தறி நெசவாளர்களுக்கு நெசவை புதிய வடிவமைப்புகளுடன் நவீன வடிவமைப்புத் தொழிலின் தேவைக்கு ஏற்ப செய்வதற்கு உதவி செய்யுமாறு ஊக்கப்படுத்தப் பட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ம் தேதி ஒதிஷாவின் புபனேஷ்வரில் நவீன வடிவமைப்போடு கைத்தறியில் முன்னேற்றம் ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான தேசியப் பயிலரங்கு ஒன்று நடைபெற்றது. மாணவர்கள், பயிற்றுநர் மற்றும் நவீன வடிவமைப்புத்துறையில் உள்ளவர்களோடு கைத்தறி நெசவாளர்கள் மத்தியிலும் அதிகமான ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அது உருவாக்கியது. சுற்றுலாப்யணிகளின் வாய்ப்புகளை கைத்தறி ஆடைகளை விற்பதற்கான வாய்ப்பாக ஏற்படுத்த வழிமுறைகள்

வகுக்கப்பட்டு கைத்தறி மற்றும் கைத்தொழிலை சுற்றுலாவோடு மேம்படுத்தும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அவை கைத்தறி மேம்பாட்டிற்கு தொடர்ந்து செயலாக்கப் படுகின்றன.

கைத்தறியை மறுசீரமைப்பதற்கு மிகவும் முக்கியமான அத்யாவசியத்தேவை கைத்தறித்துணிகளை மார்க்கெட்டில் விற்பனை செய்வதுதான். முன்பு குறிப்பிட்டபடி, கைத்தறி ஆடைகள் மின்தறி ஆடைகளோடு உள்ள போட்டியை தனித்துவ வடிவமைப்பு, வண்ணக்கலவை, ஒருசாரார் விரும்பி ஏற்கும் தனித்தன்மை ஆகியவையான தன்னுடைய சுயபலத்தினால் சமாளிக்க வேண்டியுள்ளது. அதற்கேற்றவாறு, கைத்தறி உற்பத்தி திட்டம் மார்க்கெட் தேவைக்கேற்ப இயங்கும் நிலையிலும் தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் வகையிலும் அமைதல் வேண்டும். ஒவ்வொரு நெசவாளரும் ஒரு ஓவியராகவும் ஒரு வடிவமைப்பாளராகவும் இருப்பதால், துணிகளை விற்பனை செய்பவர்களிடமிருந்து சிறிதளவு ஆதரவு இருந்தால் இந்த கைத்தறி வழிமுறை வலிமையால் பெருமைப்படுத்தப்படும். அது கைத்தறித் துணிகள் உற்பத்தியிலும் விற்பனையிலும் ஒரு ஊக்கசக்தியாக விளங்கும்.

பல்வேறுவகைப்பட்ட கைத்தறி ஆடைகளை கையாளும் குட் எர்த், பிபா (BIBA), துளசி, சவுத் ஹேன்ட்லூம்ஸ், சுந்தரி சில்க்ஸ், அங்காடி சில்க்ஸ் முதலான தனியார் நிறுவனங்கள் கடந்த சமீப காலங்களில் முன்வந்திருப்பது குறிப்படத்தக்கதாகும். அவர்களின் வெற்றி ஒருசாரார் விரும்பும் துணிகளாக உயர்நிலை வாடிக்கையாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாக கைத்தறியின் மதிப்பை பிரதிபலிக்கிறது. அத்தகைய தனியார் தொழில் நிறுவனத்தார் மார்க்கெட் தேவைக்கேற்ப வடிவமைப்பு மேற்கொள்வதற்கும் புதிய வடிவமைப்புடன் கைத்தறி நெசவாளர்கள் துணிவகைகள் உற்பத்தி செய்வதற்கு உதவி செய்வதற்கும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். விற்பனைத் தொடர்புகளுடன் வடிவமைப்பு மேம்பாட்டிற்கும் அத்தகைய முயற்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன.



கைத்தறி ஆடைகளை விற்பனை செய்வதற்கு மின் வர்த்தக முயற்சியும் தொடங்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்கள் தங்கள் கைத்தறி துணிகளை வாடிக்கையாளர்களிடம் நேரடியாக விற்பதற்கு ஒரு வழிமுறையை அமைத்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஃபிலிப்கார்ட் நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த முயற்சி மேலும் மேம்படுத்தப்படவேண்டியது தேவையானதாகும். காலப்போக்கில், இந்த நடவடிக்கை இடைத்தரகர்களின் பங்களிப்பை நீக்கி தொடக்க நிலை உற்பத்தியாளர்களின் கூலி உயர்வதற்கும் அவர்களுக்கு மார்க்கெட் தகவல்களை தொடர்ச்சியாகவும் நேரத்திற்குத்தக்கபடி எளிதாகவும் கிடைப்பதற்கும் வழிகோலும்.

கைத்தறியின் தரம் குறித்து வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கு "இந்திய கைத்தறி" என்ற சிறப்பு பெயர்முத்திரை உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த முத்திரை தரம், வடிவமைப்பில் தூய்மை ஆகியவற்றில் உறுதிசெய்து கைத்தறி வகைகளில் செலவிடப்படும் பணத்திற்கு உரிய மதிப்பிற்கு உத்தரவாதம் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும். "குறைபாடே இல்லாத மற்றும் பின்விளைவே இல்லாத ( சுற்றுச் சூழலில்)" துன்பம்தரும் புற்றுநோய் உண்டாக்கும் நிறங்கள் மற்றும் இரசாயனங்கள் வண்ணமிடுதலில் தவிர்த்தும், வெளியேற்றும் முறையில் சரியான நடவடிக்கை மேற்கொண்டும், சுற்றுப்புறத்தூய்மைக்கு தக்கவாறும், எந்தவகையிலும் குழந்தைத் தொழிலாளர் முறையை ஏற்காமல் சமூக ஒழுங்கிற்கு ஏற்பவும் இருக்கும் முறை என்பதை இந்த குறியீடு ஒரு பங்களிப்பாகக் காட்டும். இந்த கருத்தாக்கம் "MyGov.in" என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து ஆர்வமிக்க கருத்துகள் வரப்பெற்றது. இவை வழிகாட்டுதல்களை இறுதி செய்வதில் கருதப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பிரதமர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "இந்தியாவில் உருவாக்கம்" தொடக்கமுயற்சி கைத்தறி மேம்பாட்டிற்கான மற்றுமொரு வாய்ப்பை வழங்குகிறது. நெசவாளர் தொழில்முனைவோர்களாக நெசவாளர் குடும்பத்தில் உள்ள பட்டதாரிகள் தகுந்த புதிய தொழில்நுட்ப அடிப்படையோடு உற்பத்தி

செய்வதற்கு முன்வரவேண்டும். இந்தியாவினுள்ளும் வெளிநாட்டிலும் இப்போது இருக்கும் மார்க்கெட்டை கைத்தறிக்காக அதிகப்படுத்த வேண்டும்.

கைத்தறித் தொழில் மேம்பாட்டுக்கு மாநில அரசின் தீவிரமான பங்களிப்புத் தேவைப்படுகிறது. அதற்கேற்றவாறு, பல கூட்டங்களிலும், அதைப்போலவே பல்வேறு கடிதங்கள் மூலமும் உற்பத்தி திட்டம் தயாரிப்பதற்கும், கச்சாப்பொருள்கள், தறி மற்றும் தளவாடங்கள், தொழில்நுட்ப வழிகாட்டுதல், அத்தோடு மத்திய திட்டங்களின்கீழ் விற்பனை வசதிகள் ஆகியவற்றை வழங்குவதோடு தங்களின் சொந்த வழிமுறைகளால் கைத்தறியை மேம்படுத்தல் என்பதற்கும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் கைத்தறி உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள தனியார் தொழில்முனைவோர்கள், வடிவமைப்பாளர்கள் அவர்களுடைய முயற்சிகளை கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனையில் செலுத்துமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள்.

நம்முடைய வளம்நிறைந்த பண்பாட்டோடும் பாரம்பரியத்தோடும் கைத்தறி துணிகளும் கைத்தறி நெசவாளர்களும் பிரிக்கவே முடியாத ஒருங்கிணைந்த பங்காக உள்ளனர். பல்வேறுபட்ட திட்டங்களால் உதவிகள் வழங்கப்படும் அதே வேளையில், கைத்தறி நெசவாளர் சகோதர சகோதரிகள் தங்கள் தொழிலில் பெருமிதம் கொள்ள வேண்டுவது அவசியமானதாகும். சமுதாயத்திற்கு அவர்கள் வழங்கிவரும் முக்கியமான பங்களிப்பு பற்றி பெருமையுற்று மார்க்கெட் தேவைக்கான புதிய வடிவமைப்போடும் தரமான கைத்தறி உற்பத்திக்காக பல்வேறு திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுவரும் பயன்களைப் பெறுவதற்கு முன்வருதல் வேண்டும். இது அவர்களது வருவாயைப் பெருக்குவதையும், மரியாதையோடு வசதியான வாழ்க்கையை வாழ்வதையும் உலக ஜவுளித்துறையில் இந்திய கைத்தறி தனித்த இடத்தைதொடர்ந்து பெறுவதையும் உறுதி செய்யும் என்பதில் சந்தேகமே இல்லை.